
www.tlcgeography.blogspot.com

# GGYE 201: Advanced Human GeographySeminar Series 2022 May

## Bachelor of Arts, External (New Syllabus)




Prof. Fazeeha Azmi, M.I ,

BA (Hons) in Geography, University of Peradeniya; M.Phil in Geography, NTNU, Norway; PhD in Geography NTNU, Norway; Postdoctoral Researcher, NTNU, Norway.

Department of Geography

University of Peradeniya

CDCE,

Prepared by: Prof. Fazeeha Azmi

Number of Pages: 13

www.tlcgeography.blogspot.com

# உள்ளடக்கம்

1. அறிமுகம்: மானிடப்புவியியல் ..... 2
2. பொருளாதாரப்புவியியல் ..... 2
2.1. உலக பொருளாதாரம் ..... 4
2.1.1. பொருளாதார முறைமைகள் ..... 4
2.2. பொருளாதார நடவடிக்கைகளின் வகைப்பாடுகள் ..... 4
3. சனத்தொகைப்புவியியல் ..... 5
3.1. உலக சனத்தொகையின் பரம்பல் ..... 5
3.2. பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு ..... 7
4. குடியிருப்புப்புவியியல் ..... 9
4.1. நகராக்கம் ..... 9
4.2. நகரம் சார் பிரச்சினைகள் ..... 11
5. அரசியற்புவியியல் புவியியல் ..... 11
5.1. நாடுகளின் எல்லைகளின் வகைகள் ..... 12
5.2. ஆட்சி முறைமைகள் ..... 12
5.3. நாடுகளின் வடிவங்கள் ..... 12
5.4. சர்வதேச நிறுவனங்கள் ..... 13
5.5. பிராந்திய அமைப்புக்கள் ..... 14

www.tlcgeography.blogspot.com

## 1. அறிமுகம்: மானிடப்புவியியல்

*"மானிடப்புவியியலானது மானிட நடவடிக்கைகளின் வெளி ரீதியான வேறுபாடு, மற்றும் ஒழுங்கமைப்பு என்பதைப்பற்றியும், மனிதனானவன் தனது பௌதிக சூழலினை எவ்வாறு பயன்படுத்துகின்றான் என்பதையும் ஆராயும் ஒரு துறையாகும்"* – Dictionary of Human Geography (Johnston, Gregory and Smith, 1994)

புவியியலின் பிரதான உப பிரிவுகளுல் ஒன்றாக மானிடப்புவியியல் காணப்படுகின்றது. மற்றைய பிரிவான பௌதீகப்புவியியலானது சூழற்செயற்பாடுகள் தொடர்பாக நோக்கும் அதேவேளை, மானிடப் புவியியலானது புவி மேற்பரப்பில் மானிட நடவடிக்கைகளின் வெளி ரீதியான பரம்பலையும், மனித சூழல் தொடர்புகள் காரணமாக அத்தகைய நிலத்தோற்றப்பாடுகள் எவ்வாறு உருவாகின்றன என்பதையும் ஆராய்கின்றது. மேலும் மானிடப்புவியியலானது அத்தகைய நிலத் தோற்றப்பாடுகளை இடம் வெளி, காலம், மட்டம் (தேசிய, சர்வதேச), இடவமைவு, மனித சூழல் தொடர்புகள் மற்றும் பிரதேசங்கள் ஆகிய முக்கியமான சில புவியியல் எண்ணக்கருக்களுடனும் தொடர்புபடுத்தி ஆராய்கின்றது.

மானிடப்புவியியலின் உள்ளடக்கமானது, பல்வேறுபட்ட மானிட நடவடிக்கைகளின் விரிவாக்கத்தினாலும், உலகமயமாதல், காலநிலை மாற்றம், மற்றும் உலகில் பல்வேறு மட்டங்களிலும் இடம்பெறும் ஏனைய சமூக, பொருளாதார மாற்றங்கள் காரணமாக விரிவடைந்து கொண்டே செல்கின்றது. இவ்விரிவாக்கமானது, மானிடப்புவியலில் பல்வேறுபட்ட சிறப்பு உப துறைகளையும் உருவாக்கி வருகின்றது. மானிடப்புவியலிலானது கலாச்சாரப்புவியியல் என்றும் அழைக்கப்படுகின்றது.

மானிடப்புவியியலானது தனது பிரதான உப பிரிவுகளாக பொருளாதாரப்புவியியல், சனத்தொகைப்புவியியல், குடியிருப்புப்புவியியல், அரசியற்புவியியல் போன்றனவற்றைக் கொண்டுள்ளது.

## 2. பொருளாதாரப்புவியியல்

பொருளாதாரப்புவியியலானது, பொருளாதார ஒழுங்கமைப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் போன்றனவற்றினை புவியியல் ரீதியாகக் கற்கும் ஒரு துறையாகும். பொருளாதாரப்புவியியலானது, வளங்களினதும், பொருளாதார நடவடிக்கைகளினதும் சமமற்ற தன்மையினை உலகலாவிய பொருளாதர வெளியில் ஆராய்கின்றது. அது, வெளி, இடம், அளவுத்திட்டம் போன்ற முக்கிய புவியியல் எண்ணக்கருக்களை தனது ஆய்வுகளில் பயன்படுத்துகின்றது. உதாரணமாக வெளி என்ற எண்ணக்கருவிளைப் பயன்படுத்தி, ஒரு

www.tlcgeography.blogspot.com

குறிப்பிட்ட பொருளாதார ரீதியான செயற்பாடு இடம்பெறும் இடத்தினை அடையாளம் காணலாம். அதாவது பொருளாதாரப் புவியியலின் முக்கிய செயற்பாடுகளுல் ஒன்றான வர்த்தகம் என்பது இரண்டு நாடுகளுக்கிடையே இடம்பெறுகின்றதைக் குறிப்பிடலாம். அதுபோன்றே, முதலாளித்துவத்தின் சமமற்ற வெளி ரீதியான பரம்பலையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். அடுத்து இடம் என்ற எண்ணக்கருவினைப் பயன்படுத்தும் போது, பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் போன்றனவற்றின் தன்மை இடங்களுக்கு ஏற்ப வேறுபடுவதை குறிப்பிடலாம். உதாரணமாக பொலநறுவையில் காணப்படும் பொருளாதார நடவடிக்கைக்கும் டோக்கியோவில் காணப்படும் பொருளாதார நடவடிக்கைக்கும் வேறுபாடுகள் கணப்படும். இவ்வேறுபாடுகள் அவ்விரண்டு இடங்களதும் சமூக, பொருளாதார, கலச்சார, அரசியல், சூழல் மற்றும் அரியல் காரணிகளின் அடிப்படையில் வேறுபடும். முற்றொரு எண்ணக்கருவான, அளவுத்திட்டம் என்பதை நோக்கும் போது, பொருளாதர செயற்பாடுகளை நாம் பல மட்டங்களையும் அடிப்படையாகக கொண்டு ஆராயலாம் என்பதைக் குறிப்பிடுகின்றது. உதாரணமாக, சர்வதேச மட்டம், உள்நாட்டு மட்டடம், பிராந்திய மட்டம் என ஆராய்வதைக்குறிப்பிடலாம்.

கோட்பாட்டு ரீதியாக நோக்கும்போது, பொருளாதாரப்புவியியலானது, **பழம்பெரும், இடவவைக் கோட்பாடுகளைப்** பயன்படுத்தி (Ex: Von Thunen, Alfred Weber), பொருளாதார நடவடிக்கைகளின் உருவாக்கம் மற்றும், வெளிரீதியாக பொருளாதார நிலத்தோற்றப்பாடுகள் எவ்வாறு உருவாகின்றன என்பதை விளக்கியது. உலகமயமாதலுடன் பழம்பெரும் இடவமைவுக் கோட்பாடுகள் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளன. துறை ரீதியான தொடர்புகளை நோக்கும் பொழுது, பொருளாதாரப் புவியயிலானது, பொருளியல் துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. Paul Krugman (பொருளியலாளர்) நவீன பொருளியலானது நீண்ட காலமாகவே உலக பொருளாதாரததின் வெளி ரீதியான பரிமாணத்தினைப் புறக்கனித்து வருவதை அடிப்படையாகக் கொண்டு 'புதிய பொருளாதாரப் புவிவியல்' என்ற கோட்பாட்டினை முன்வைத்தார். இவரது கோட்பாடானது வெளி ரீதியான பொருளாதாரத்தினை ஒரு பொதுச்சமநிலை மாதிரியின் மூலம் காட்டுவதாக அமைந்நதது. இம்மாதிரியானது புவியியலாளர்களின் விமர்சனத்திற்கும் உள்ளாகியது.

புதிய பொருளாதாரப் புவிவியலானது உலகமயமாதலுடன் தொடர்புபட்ட புதிய பொருளாதாரமானது உருவாக்கியுள்ள சமத்துவமற்ற தன்மைகளை விளக்குகின்றது. அதாவது, புதிய பொருளாதரமானது, உலகமயமாதல், தொலைத்தொடர்பு வசதிகள், அதிகரித்துவரும் தகவல் தொழில்நுட்ப வசதிகள், அறிவுசார் விடயங்களின் வளர்ச்சி (ஆய்வு, கண்டுபிடிப்புக்கள்), மற்றும் பெண்நிலைமயமாகியுள்ள பொருளாதார நடவடிக்கைகள், வறுமை போன்றனவற்றை முக்கிய பண்புகளாகக் கொண்டுள்ளன. நீண்டகாலமாகவே பொருளாதரப் புவியியலானது, பொருளாதார நடவடிக்கைகள் (விவாயம், கைத்தொழில், சேவைகள்) போக்குவரத்து தொலைத்தொடர்பு, சர்வதேச வர்த்தகம், வளங்களின் பரம்பல், போன்றனவற்றைத் தனது உள்ளடக்கமாகக் கொண்டிருந்தது. இன்று பொருளாதாரப் புவியியலின் உள்ளடக்கமானது மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் பல புதிய விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.

## 2.1. உலக பொருளாதாரம்

### 2.1.1. பொருளாதார முறைமைகள்

1. பிழைப்பூதிய பொருளாதாரங்கள்
2. அடிமைத்துவம்
3. நிலப்பிபுத்துவம்
4. முதலாளித்துவம்
5. சோஷலிஸம்

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பொருளாதார முறைமைகளையும் வேறுபடுத்தும் காரணிகள்:

உற்பத்திக்காரணிகள்: உதாரணமாக அடிமைத்துவத்தில், ஊழியத்தின் பேரம் பேசும் தன்மை ஊழியர்களின் சொந்தக்காரர்களிடம் காணப்படும், முதலாளித்துவத்தின் கீழ் ஊழியர்கள் தாம் பேரம் பேசும் அதிகாரத்தைக் கொண்டுள்ளனர்

தொழில் நுட்பம்: முதலாளித்துவம் அதிக தொழில் நுட்பத்தினைப்பயன் படுத்துகின்றது

சமூகக்கட்டமைப்பு: வகுப்பு ரீதியான சமூகக்கட்டமைப்பு முதலாளித்துவத்தினால் ஏற்பட்டுள்ளது.

பொருளாதார முறைமைகளின் மேற்குறிப்பிட்ட வேறுபாடுகளுக்கு ஏற்ப புவியியல் ரீதியான வேறுபட்ட உற்பத்தி முறைகைள் உருவாகியுள்ளன.

## 2.2. பொருளாதார நடவடிக்கைகளின் வகைப்பாடுகள்

உலகில் சமகாலத்தில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் பொருளாதார நடவடிக்கைகளை ஐந்து முறைமைகளாகப் பிரித்து நோக்க முடியும் (Fellmann et al 1997). அவை:

- முதலாம் நிலைத்துறை (உதாரணம்: விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, சுரங்கமருத்தல்)
- இரண்டாம் நிலைத்துறை (கைத்தொழில்)
- மூன்றாம் நிலைத்துறை (சேவைகள்)
- நான்காம் நிலைத்துறை (உற்பத்தியாளர்களால் வேண்டப்படும் சேவைகள்: காப்புறுதி. வங்கி)
- ஐந்தாம் நிலைத்துறை (உயர்மட்ட தீர்மானம் எடுக்கும் துறைகள்: அரசாங்கம், சுகாதாரத்துறை, பாதுகாப்புத்துறை)

**விரிவுரையின்போது**

விவசாய இடவமைவு தொடர்பான கோட்பாடுகள். விவசாயத்துறை சார் பிரச்சினைகள் (மாறிவரும் விவசாயப் புவிவியியலின் உள்ளடக்கம், விவசாயக் கைத்தொழில்கள், சூழற்பாதிப்புக்கள், விவசாயத் தொழில் நுட்பங்கள், உணவு வர்த்தகம், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் விவசாயம்)

www.tlcgeography.blogspot.com

கைத்தொழில் இடவமைவு தொடர்பான கோட்பாடுகள். கைத்தொழில் துறை சார் பிரச்சினைகள்

## 3. சனத்தொகைப்புவியியல்

மானிடப்புவியியலின் பிரதான உப பிரிவுகளுல் ஒன்றான சனத்தொகைப்புவியியலானது, சனத்தொகை வளர்ச்சிப்பாங்குகள், போக்கு, அதன் பரம்பல், செறிவு போன்றனவற்றை பௌதிக மற்றும் கலாச்சார நிலத்தோற்றப்பாடுகளுடன் இணைத்து நோக்குகின்றது. சனத்தொகை அளவினைத்தீர்மானிக்கும், பிறப்பு இறப்பு இடப்பெயர்வு சனத்தொகைப் புவியியலில் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. சனத்தொகைப் புவியியலானது சனத் தொகை, வளங்கள் மற்றும் அபிவிருத்தி என்பனவற்றிற்கான தொர்புகளையும் ஆராய்கின்றது. இத்தகைய அணுகுமுறையானது, அபிவிருத்தி மற்றும் சனத்தொகை தொடர்பான கொள்கை வகுப்பிற்கு, அவசியமானது. சனத்தொகை தொடர்பான புவியியலானது, மானிடப்புவியியல் முக்கியத்துவம் கொடுக்கும் பல்வேறு விடயத்தலைப்புக்களையும் பிரச்சினைகளையும் உள்ளடக்கியுள்ளது. சனத்தொகைக்கும் உணவு உற்பத்திக்குமான தொடர்புகள், வறுமை ஒழிப்பு. உணவு விநியோகம், உணவுப்பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, சனத்தொகைக் கொள்கைகள், போன்ற பல தலைப்புக்களையும் சனத்தொகைப் புவியியலாளர்கள், அளவு சார் மற்றும் பண்பு சார் ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்து வருகிறார்கள். இது போலவே சனத்தொகைப் புவியியலாளர்கள் மானிட இடப்பெயர்வு வகைகள், அவர்களை இடம்பெயரச்செய்யும் காரணிகள், கவர்ந்தெடுக்கும் காரணிகள் போன்ற தலைப்புக்களை நீண்ட காலமாகவே ஆராய்ந்து வந்துள்ளார்கள். அத்துடன் சமகால மானிடப்புவியியலானது உள்நாட்டு இடப்பெயர்வு, அகதிகள் இடப்பெயர்வு, மாணவர்களின் இடப்பெயர்வு, தொழிலாளர்களின் இடப்பெயர்வு, ஆகிய தலைப்புக்களுக்கு முக்கியம் கொடுத்து வருகின்றது.

### 3.1. உலக சனத்தொகையின் பரம்பல்


உலக சனத்தொகையின் புவியியல் ரீதியான பரம்பலினை நோக்கும் போது உலகின் நான்கு முக்கிய புவியியற் பிரதேசங்கள் சனச்செறிவு மிக்க பிரதேசங்களாக அடையாளப்படுத்தக் கூடியனவாகக் காணப்படுகின்றன. அவை கிழக்காசியா, தென்னாசியா, தென்கிழக்காசியா, ஐரோப்பா என்பனவாகும் (Knox and Marston 2015, Boyle 2014, Knox and Marston 2015, Rubenstein 2016). இப்பிரதேசங்களில், சனத்தொகையின் செறிவினை பௌதிகக் காரணிகளும், மானிடக்காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பௌதிகக் காரணிகளாக, சிறந்த காலநிலைத் தன்மைகள், மண் வளம், சமதரை, நீர் வசதிகள், கனிய வளங்களின் கிடைப்பனவு போன்றனவற்றை அடையாளப்படுத்தலாம். மானிடக் காரணிகளாக, அரசியல் உறுதிப்பாடு, பொருளாதார வாய்ப்புக்கள், சிறந்த கலாச்சார மற்றும் வரலாற்று விழுமியங்கள், அமைதியான சூழல் போன்ற பலவும் காணப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட பௌதிக மானிடக்காரணிகள் வாய்ப்பாக அமையாத போது அங்கு சனத்தொகை அடர்த்தியானது அதிகமாகக் காணப்படும். சதுப்பு நிலங்கள், துருவப்பகுதிகள், பாலைவனங்கள் மற்றும் குத்துச்சாய்வான மலைகளைக் கொண்ட பிரதேசங்கள், குறைவான

www.tlcgeography.blogspot.com

சனத்தொகை அடர்த்தியைக் கொண்டுள்ளன. பௌதீகக் காரணிகள் வாய்ப்பானவையாக அமையும் போது, அங்கு சனத்தொகை அடர்த்தியும் அதிகமாகக் காணப்படும்.

அது போன்றே மானிடக் காரணிகளைப் பொருத்தவரை அரசியல் குழப்பங்கள், யுத்தங்கள் நிலவும் நாடுகள், தொழில் வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படும் பிரதேசங்கள் போன்றன சனத்தொகை அடர்த்தி குறைவான பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. மானிடக் காரணிகள் வாய்ப்பானவையாக அமையும் போது, அங்கு சனச்செறிவு அதிகமானதாகக் காணப்படும். உதாரணமாக, மத்திய கிழக்கில் கலாச்சார, வரலாற்று, மற்றும் மத ரீதியான மானிடக் காரணிகளுடன் தொடர்பு பட்டு மக்கா, மதீனா போன்ற நகரங்கள் அதிக சனச்செறிவு கொண்டனவாகக் காணப்படுகின்றன (படம் 1).

**படம் 1: உலக சனத்தொகைப் பரம்பல்**




மூலம்: https://www.jkgeography.com/physical-and-human-factors-affecting-global-population-distribution.html Accessed .2.12.2021)

அட்டவணை 1 உலக சனத்தொகையின் வளர்ச்சியையும் அதன் புவியியற் பிரதேச ரீதியான பரம்பலையும் காட்டுகின்றது.

www.tlcgeography.blogspot.com

**அட்டவணை 1 சனத்தொகை பரவல் வளர்ச்சி**

**Population of the world, SDG regions and selected groups of countries, 2019, 2030, 2050 and 2100, according to the medium-variant projection**

| | Population (millions) | | | |
|---|---|---|---|---|
| Region | 2019 | 2030 | 2050 | 2100 |
| **World** | **7 713** | **8 548** | **9 735** | **10 875** |
| Sub-Saharan Africa | 1 066 | 1 400 | 2 118 | 3 775 |
| Northern Africa and Western Asia | 517 | 609 | 754 | 924 |
| Central and Southern Asia | 1 991 | 2 227 | 2 496 | 2 334 |
| Eastern and South-Eastern Asia | 2 335 | 2 427 | 2 411 | 1 967 |
| Latin America and the Caribbean | 648 | 706 | 762 | 680 |
| Australia/New Zealand | 30 | 33 | 38 | 49 |
| Oceania* | 12 | 15 | 19 | 26 |
| Europe and Northern America | 1 114 | 1 132 | 1 136 | 1 120 |
| | | | | |
| Least developed countries | 1 033 | 1 314 | 1 877 | 3 047 |
| Land-locked Developing Countries | 521 | 659 | 926 | 1 406 |
| Small Island Developing States | 71 | 78 | 87 | 88 |

Data source: United Nations, Department of Economic and Social Affairs, Population Division (2019). *World Population Prospects 2019.*
* excluding Australia and New Zealand

## 3.2. பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு

ஒரு பிரதேசத்தின் இடத்தின் சனத்தொகையைப் பொருத்தவரை அதன் அளவினைத் தீர்மானிக்கும் மிக முக்கிய காரணிகளாக பிறப்பு இறப்பு, இடப்பெயர்வு என்பன காணப்படுகின்றன. பிறப்புவீதமானது சுத்தீகரிக்கப்பட்ட பிறப்புவீதம் என்ற அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நாட்டின் நடு ஆண்டு சனத்தொகையில் ஒரு வருடத்திற்குள் ஒவ்வொரு 1000 மக்களிடையேயும் இடம்பெறும் மொத்த பிறப்புக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும். இங்கு முக்கியமாக நோக்கப்பட வேண்டிய விடயம் சுத்தீகரிக்கப்பட்ட பிறப்பு வீதம் என்பது, கணிப்பீடு செய்யப்படும் போது உள்ளடக்கப்படும் 1000 பேர் குறிப்பிட்ட ஒரு வயதுக் குழுவினரை (உதாரணமாக இனப்பெருக்க வயதிலுள்ள வயதினர்) உள்ளடக்கியதாகக் காணப்படாது. Crude Birth Rate (CBR) எனப்படும் சுத்தீகரிக்கப்பட்ட பிறப்பு வீதத்தினைத் தீர்மானிப்பதில் ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மட்டம், பெண்களின் கல்வியறிவு வீதம், மத நம்பிக்கைகள் மற்றும், சமூக கலாச்சார விழுமியங்கள், சனத்தொகைக் கொள்கைகள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன (Knox and Marston 2015). அங்கோலா, நைஜர், மாலி, உகண்டா, சம்பியா, புருண்டி, பர்கினாபசோ, மாலாவி, சோமாலியா, லைபீரியா போன்ற நாடுகள் உயர் பிறப்பு வீதங்களைக் கொண்ட முதற் பத்து நாடுகளாகக் காணப்படுகின்றன. இவை அனைத்தும் ஆபிரிக்கக் கண்டத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொத்த இறப்பு வீதம் ஒரு நாட்டின் சனத்தொகையில் செல்வாக்குச் செலுத்தும் மற்றொரு காரணியாகும். இது குறிப்பிட்ட ஒரு வருடத்திற்குள் ஒரு நாட்டின் நடு ஆண்டுச் சனத்தொகையில் 1000 மக்களுக்குள் இடம்பெறும் மொத்த இறப்புக்களின் எண்ணிக்கையைக் காட்டி நிற்கின்றது. இது, சுத்தீகரிக்கப்பட்ட இறப்பு வீதம் எனப்படும். இதுவும் பெரும்பாலும் ஒரு நாட்டின் பொருளாதார

www.tlcgeography.blogspot.com

அபிவிருத்தி மட்டத்துடன் தொடர்புபட்டதாகக் காணப்பட்டாலும், ஏனைய காரணிகளான, சுகாதார வசதிகளின் கிடைப்பனவு, தொழில், சமூக வகுப்பு, வருமானம், போன்ற காரணிகளுடனும் தொடர்புபட்டுள்ளன. இறப்பு வீதம் என்பது, ஆண் பெண் இருபாலாரிற்கும் வயது அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படலாம். புரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு இறப்புவீத அளவீட்டுக் குறிகாட்டியாக சிசு மரண வீதம் காணப்படுகின்றது. இது Infant Morality Rate (IMR) எனப்படுகின்றது. இதனைக் ஒரு நாட்டில், ஒரு வருடத்திற்குள், இடம்பெறும் மொத்த உயிர் பிறப்புக்களுடன் ஒப்பிடும் பொழுது அதே வருடத்திற்குள் இடம்பெறும் ஒரு வருடத்திற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளின் இறப்பு எவ்வளவாகக் காணப்படுகின்றது என்பதனைக் கணிப்பீடு செய்வதன் மூலம் அறிய முடிகின்றது. உலகில் உயர் சிசு மரண வீதம் கொண்ட நாடுகளாக, அங்கோலா, சியாராலியோன், ஆப்கானிஸ்தான், லைபீரியா நைஜர், சோமாலியா, மொஸாம்பிக் போன்ற நாடுகள் காணப்படுகின்றன.

அடுத்து இடப்பெயர்வு என்பது, ஒரு குறிப்பிட்ட நாட்டின் சனத்தொகையில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது. இடப்பெயர்வு என்பது ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்தினை நோக்கி விருப்பத்தின் அடிப்படையில் அல்லது கட்டாயமாக இடம்பெறும் அசைவாகும். இடப்பெயர்விற்கு உட்படும் மக்கள் தமது இருப்பிடத்தினைக் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ மாற்றிக் கொள்ளலாம். இடப்பெயர்வின் போது ஒரு இடத்திலிருந்து, மற்றொரு இடத்தினை நோக்கி வெளியேறுவது, குடியகழ்வு என்படும். உதாரணமாக ஒருவர் இலங்கையிலிருந்து தொழில் அல்லது கல்வி வாய்ப்புக்கள் மற்றும் ஏனைய தேவைகள் கருதி வெளியேறுவாராயின் அது குடியகழ்வு எனப்படும். இது புவியியலில் வெளி நோக்கிய இடப்பெயர்வு எனவும் அழைக்கப்படும். அடுத்து இடப்பெயர்வினைப் பொருத்தவரை குடிவரவு என்ற பதம் முக்கியம் பெறுகின்றது. குடிவரவு எனப்படுவது பல தேவைகள் கருதியும், நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ, ஒரு பிரதேசத்திற்குள் வருகை தருவதைக் குறிக்கும்.

புவியியலில் இடப்பெயர்வினைத் தீர்மானிக்கும் காரணிகள், ஈர்த்தல் காரணிகள், தள்ளல் காரணிகள் என்ற அடிப்படைகளில் நோக்கப்படுகின்றன. அவ்விரு காரணிகளிலும் பௌதீக மானிடக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. உதாரணமாக, ஒரு பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய வளங்கள், தொழில் மற்றும் கல்வி வாய்ப்புக்கள், மற்றொரு பிரதேசத்தைப் பொருத்தவரை ஈர்த்தல் காரணிகளாக அமையலாம். அதே நேரம் ஒரு பிரதேசத்தில் பொருத்தமற்ற காலநிலை, வளப்பற்றாக்குறை, அரசியல் உறுதித்தன்மை அற்ற நிலைமைகள் போன்றன காணப்படுமாயின், அப்பிரதேசத்தைப் பொருத்தவரை மேற்குறிப்பிட்ட விடயங்கள் தள்ளல் காரணிகளாகக் காணப்படும். வாய்ப்புக்கள் வளங்கள் போன்றனவற்றின் பரம்பலில் காணப்படும் சமமற்ற தன்மையானது, ஈர்த்தல், தள்ளல் காரணிகள் என்ற அடிப்படையில் உலகின் இடப்பெயர்வுப் பாங்குகளையும் போக்குகளையும் தீர்மானிக்கின்றன. பொதுவாக இடப்பெயர்வு பற்றிய தீர்மானங்கள் ஈர்த்தல், தள்ளல் போன்ற இரு காரணிகளின் அடிப்படையிலேயே இடம் பெறுகின்றன.

இன்று உலகில் இம்பெறும் இடப்பெயர்வு வகைகளில் தொழில் மற்றும் கல்வியினை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் இடப்பெயர்வுகள் முக்கிய இடம் பெறுகின்றது. அடுத்து முக்கியம் பெறுவது, தஞ்சமடைவோர் மற்றும் அகதிகள் இடப்பெயர்வாகும். தஞ்சமடைவோர் இடப்பெயர்வானது, நாடுகளில் இடம்பெறும் யுத்தங்கள், உள்நாட்டுக்குழப்பங்கள், கிளர்ச்சிகள், மற்றும் அரசியல் உறுதிப்பாடற்ற நிலைமைகள் போன்றனவற்றால் ஏற்படுகின்றன. அகதிகள் எனப்படுவோர் யுத்தங்கள்,

www.tlcgeography.blogspot.com

உள்நாட்டுப்பிரச்சினைகள், இயற்கை அனர்த்தங்கள் போன்றனவற்றின் விளைவாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களைக் குறிப்பிடலாம். உதாரணமாக இலங்கையில் யுத்த காலங்களில் இடம்பெற்ற உள்நாட்டு இடப்பெயர்வினைக் குறிப்பிடலாம். அதுபோன்றே உலகின் பல பிரதேசங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களினால் உந்தப்பட்ட இடப்பெயர்வுகளும் இடம் பெறுகின்றன. இலங்கையைப் பொருத்தவரை இதற்கு சிறந்த உதாரணமாக. மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் போது இடம்பெற்ற இடப்பெயர்வு, தெற்கு அதி வேகப்பாதை அமைத்தலின் பொழுது இடம்பெற்ற இடப்பெயர்வு போன்றனவற்றைக் கொள்ளலாம். இவ்வபிவிருத்தி நடவடிக்கைகளிகனின் போது இடம்பெற்ற இடப்பெயர்வுகள் சுயேட்சையாக இடம்பெற்றனவாகவும், பலவந்தமாக இடம்பெற்றனவாகவும் காணப்படுகின்றன.

**விரிவுரையின்போது**

சனத்தொகை சார் பிரச்சினைகள்

## 4. குடியிருப்புப்புவியியல்

குடியிருப்புப்புவியியலானது மக்கள் வாழும் இடங்களைப்பற்றியது. அது குடியிருப்புக்களை விளக்குவதாகவும், விவரிப்பதாகவும், அவற்றின் இடவமைவு, உள்ளடக்கம், சூழலுடன் கொண்டுள்ள தொடர்பு, மேலும் அவற்றின் செயற்பாடுகள், வளர்ச்சி தோற்றம் என்பனவற்றை கால ரீதியாகவும் இட ரீதியாகவும் விளக்குவதாகவும் அமைகின்றது. குடியிருப்புக்களின் உருவாக்கமானது நீண்டகால வரலாற்றினைக் கொண்டது. மனித சூழல் தொடர்புகளின் முக்கியமானதொரு வெளிப்பாடாக குடியிருப்புக்களை அடையாளப்படுத்தலாம். குடியிருப்புக்களை விவரிக்கும் போது பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படுகின்றன: பரப்பு (குடியிருப்புக்கள் எவ்வளவு பெரிதாகக் காணப்படுகின்றன) அது இடவமைவு பெற்றுள்ள சூழல், நிலைமை (ஏனைய குடியிருப்புக்கள், ஆறுகள், தொலைத்தொடர்பு வசதிகள் போன்றனவற்றுடன் ஒப்பிடும்போது), செயற்பாடுகள் (வர்ததகம், கல்வி, சுற்றுலா), சனத்தொகை (சனத்தொகையின் அளவு, தன்மை), வடிவம் (கொத்தனி, நேர்கோடு).

குடியிருப்புக்கள் குக்கிராமங்களில் இருந்து பாரிய நகரங்கள் வரை வேறுபடலாம். குடியிருப்புக்கள் தற்காலிகமானவையாகவோ நிரந்தரமானவையாகவோ இருக்கலாம். குடியிருப்பு புவியியலின் பிரதான இரண்டு பிரிவுகளாக நகரக்குடியிருப்பும் கிரமாக்குடியிருப்பும் காணப்படுகின்றது. இவ்விரு வகையான குடியிருப்புக்களும் பல விதமான செயற்பாடுகளை மேற் கொள்கின்றன. கிரமாக்குடியிருப்புக்களை விட நகரக்குடியிருப்புக்கள் அதிக செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. அந்தவயைில் நகரப்புவியியல் ரீதியான கற்கைகளில் நகராக்கம், நகர வளர்ச்சி, நகர செயற்பாடுகள், நகர நிலப்பயன்பாடு, நகரம் சார் பிரச்சினைகன் என்பன முககியம் பெறுகின்றன.

### 4.1. நகராக்கம்

நகராக்கம் என்றால் என்ன என்பது தொடர்பாகப் பல வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. நகரங்கள் எனப்படும் இடங்களில் சனச்செறிவு தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் படிமுறை நகராக்கம் என்படுகின்றது (Greiner 2014). புவியியலாளர்கள் நகராக்கத்தினை அளவீடு செய்யும்

www.tlcgeography.blogspot.com

பொழுது, நகராக்கமட்டம் என்ற குறிகாட்டியினைப் பயன்படுத்துகிறார்கள். நகராக்க மட்டம் எனும் பொழுது அது நகரங்களில் வாழக் கூடிய மொத்த சனத்தொகையின் அளவினைக் குறிப்பிடுகின்றது. அதாவது ஒரு நாட்டின் மொத்த சனத்தொகையில் எத்தனை வீத மக்கள் நகரங்களில் வாழ்கின்றார்கள் என்பதை இது குறிக்கும். நகர மட்டம் பிரதானமாக நகர எல்லைகளுக்குள் இடம்பெறும் இயற்கை அதிகரிப்பு வீதம், நகரங்களை நோக்கிய இடப்பெயர்வு ஆகிய காரணிகள் மூலம் இடம்பெறலாம். இவ்விரு செயற்பாடுகளும் நகர சனத்தொகையின் வருடாந்த வளர்ச்சி வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளாகும். மேற்குறிப்பிட் காரணிகளைத்தவிர, நாடுகள் அரசியல் அல்லது வேறு காரணங்களின் அடிப்படையில், நகர நிர்வாக எல்லைகளை மாற்றியமைப்பதும் நகராக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும். இலங்யையில் நகர மக்களின் வீதம் 18.7 ஆகக் காணப்படுகின்றது. சுமார் 3.94மில்லியன் மக்கள் நகரங்களில் வசிக்கிறார்கள்.

**அட்டவணை 2 மொத்த சனத்தொகையில் நகர சனத்தொகையின் வீதம்**

| புவியியல் பிரதேசங்கள் | நகர சனத்தொகை வீதம் |
|---|---|
| ஆபிரிக்கா | 42.5 |
| ஆசியா | 49.9 |
| ஐரோப்பா | 74.5 |
| இலத்தீன் அமெரிக்காவும் கரீபியனும் | 80.7 |
| வட அமெரிக்கா | 82.2 |
| ஓசியானியா | 68.2 |

மூலம்: World Urbanization Prospectus 2018


**அட்டவணை 3: 1950 -2050 இடைப்பட்ட காலத்தில் உலக, நகர, கிராமிய சனத்தொகை போக்கு**

| | *Population (billions)* | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *Development group* | *1950* | *1970* | *1990* | *2018* | *2030* | *2050* |
| Total population | | | | | | |
| World | 2.54 | 3.70 | 5.33 | 7.63 | 8.55 | 9.77 |
| More developed regions | 0.81 | 1.01 | 1.15 | 1.26 | 1.29 | 1.30 |
| Less developed regions | 1.72 | 2.69 | 4.18 | 6.37 | 7.26 | 8.47 |
| Urban population | | | | | | |
| World | 0.75 | 1.35 | 2.29 | 4.22 | 5.17 | 6.68 |
| More developed regions | 0.45 | 0.67 | 0.83 | 0.99 | 1.05 | 1.12 |
| Less developed regions | 0.30 | 0.68 | 1.46 | 3.23 | 4.12 | 5.56 |
| Rural population | | | | | | |
| World | 1.79 | 2.35 | 3.04 | 3.41 | 3.38 | 3.09 |
| More developed regions | 0.37 | 0.33 | 0.32 | 0.27 | 0.24 | 0.17 |
| Less developed regions | 1.42 | 2.01 | 2.72 | 3.14 | 3.14 | 2.92 |

மூலம்: World Urbanization Prospectus 2018

www.tlcgeography.blogspot.com

**படம் 2. உலகின் மெகா நகரங்களின் பரம்பல்**




மூலம்: World Urbanization Prospectus 2018

படம் 2 உலகின் மெகா நகரங்களின் பரவலைக்காட்டி நிற்கின்றது. பெரும்பாலான மெகா நகரங்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஆசியா அதிக மெகா நகரங்களைக் கொண்டுள்ளது.

**விரிவுரையின்போது**

**4.2. நகரம் சார் பிரச்சினைகள்**

அதிகரித்துவரும் நகராக்கமானது பல நகர்சார் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. நகர சனத்தொகை அதிகரிப்பு, சூழற் பிரச்சினைகள், பசுமை நகரங்கள், வறுமை, வளங்களின் பற்றாக்குறை (நிலம்), வீடில்லாப்பிரச்சினை, வேலையின்மை, சேரிகளின் உருவாக்கம், நீர்ப்பற்றாக்குறை, கழிவகற்றல் பிரச்சினை, சுகாதாரப்பிரச்சினைகள், போக்குவரத்துப்பிரச்சினை, நகரக்குற்றச்செயல்கள் போன்றன முக்கியமானவையாகும்.

## 5. அரசியற்புவியியல் புவியியல்

அரசியற் புவியியலானது உலகின் அரசியல் தோற்றப்பாடுகளின் புவியியில் ரீதியான பரம்பலையும், ஒழுங்கமைப்பையும் பற்றி ஆராயும் மானிடப்புவியியலின் ஒரு உப பிரிவாகும். அரசியல் புவியியலானது மனிதர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கும், பௌதிக, பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் ரீதியான வெளிகளிற்கும் இடையிலான இடைத்தொடர்பை விளக்குவதையும், ஆராய்வதையும் அடிப்படையாகக் கொண்டது. அவ்வகையில் அரசியற்புவியியல் முக்கியம் கொடுக்கும் தொனிப்பொருட்களாக: புவிசார் அரசியல், எல்லைகள், நாடுகள், அரசு, அடையாளம், குடியுரிமை, தேர்தல்கள், பிரதேச அரசியல் என்பன காணப்படுகின்றன. அத்துடன் அரசியற்புவியியலானது, பல்வேறுபட்ட சர்வதேச அமைப்புக்கள் பற்றியும் ஆர்வம் கொண்டுள்ளது.

www.tlcgeography.blogspot.com

### 5.1. நாடுகளின் எல்லைகளின் வகைகள்


நாடுகளின் எல்லைகள் பௌதிக மற்றும் கலாச்சாரக் காரணிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. பௌதிக அடிப்படையிலான எல்லைகளுக்கு உதாரணமாக, பாலை வனங்கள், ஆறுகள், மலைகள், போன்றனவற்றையும், கலாச்சாரக்காரணிகளிற்கு உதாரணமாக, மதம், மொழி, கலாச்சாரம் போன்றனவற்றையும் கொள்ளலாம்.

### 5.2. ஆட்சி முறைமைகள்

ஆட்சி முறைமைகளை ஒற்றையாட்சி முறை, கூட்டாற்சி முறை எனப்பிரித்து நோக்கலாம். ஒற்றையாட்சி முறையின் கீழ் அரசின் அதிகாரம் ஒரு மைய அரசாங்கத்தின் கீழும், கூட்டாற்சி முறையின் கீழ் அரசின் அதிகாரமானது பல மட்டங்களிலும் காணப்படும் அரசாங்கங்களிற்கிடையேயும் பகிரப்பட்டிருக்கும். ஐக்கிய அமெரிக்கா கூட்டாற்சி முறைமைக்கு சிறந்த உதாரணமாகும். பெரிய புவியியற் பிரதேசங்களைக் கொண்டிருப்பது, கூட்டாற்சி முறைமையை நடைமுறைப்படுத்த இலகுவானதாக அமையும். தனியொரு ஒரு இடத்திலிருந்து அதிகாரத்தைக்குவித்து ஆட்சி செய்வதைவிட பெரிய நிலப்பரப்பு கொண்ட நாடுகளுக்கு இம்முறைமை சிறந்ததெனப்படுகின்றது. எனினும் உலகின் பெரும்பாலான நாடுகள் ஒற்றையாட்சி முறையின் கீழேயே காணப்படுகின்றன.

### 5.3. நாடுகளின் வடிவங்கள்


உரு 1: நாடுகளின் வடிவங்கள்




அரசியற்புவியியலானது, நாடுகளை அதன் வடிவத்திற்கு முக்கியம் கொடுத்து ஆராய்ந்துள்ளது. அந்த வகையில் காட்டப்பட்டுள்ள உள்ள வடிவமைப்புக்களில் நாடுகள் காணப்படுகின்றன.

நாடுகளின் வடிவம் என்பது, தொலைத்தொடர்பு, பாதுகாப்பு, அபிவிருத்தி, மற்றும் வளங்களின் உரிமை தொடர்பாக அறிய முக்கியம் பெறுகின்றன. மேலுள்ள உரு 1 நாடுகளின் வடிவங்களைக் காட்டி நிற்கின்றது. மேலுள்ளவை தவிர நுண் அரசுகளும் (Micro states) காணப்படுகின்றன. உதாரணமாக, வத்திக்கான், சென் மரினோ.

உரு 2 நாடுகளின் வடிவங்கள்




மூலம்: https://www.pinterest.com/pin/438819557422199459/ Accessed 12.04.2022

### 5.4. சர்வதேச நிறுவனங்கள்

அரசியற் புவியியலைப் பொருத்தவரை மிக முக்கியமான ஒரு விடயத்தலைப்பாக சர்வதேச நிறுவனங்கள் காணப்படுகின்றது. முதலாம் உலகயுத்தத்தின் பின்னர் நாடுகளுகடகிடையே சமாதானத்தையும், நல்லுறவையும் உருவாக்கும் பொருட்டு, நாடுகளின் முன்னனி என்ற ஒரு சர்வதேச அமைப்பு உருவாகியது. 1920-1942 வரை 58 நாடுகளின் அங்கத்துவத்துடன் உருவான இவ்வமைப்பு பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முனைந்தது. ஐக்கிய அமெரிக்க இந்த அமைப்பில் அங்கத்துவம் வகிக்கவில்லை. இரண்டாம் உலக யுத்தத்தின் உருவாக்கத்துடன் இவ்வமைப்பு வீழ்ச்சியடைந்தது. ஆதனைத்தொடர்ந்து 1947 ஆம் ஆண்டு மற்றொரு இணைந்த முயற்சியாக ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கம் பெற்றது. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை முக்கிய தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. அதிலும் நிரந்தர அங்கத்தவர்களான, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம் சீனா, ரஷ்யா ஆகியன முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் உலக

www.tlcgeography.blogspot.com

சுகாதார அமைப்பு, சர்வதேச நீதி மன்றம், உலக உணவு விவசாய நிறுவனம், சர்வதேச தொழிலாளர் அமைப்பு, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றன காணப்படுகின்றன.

**5.5. பிராந்திய அமைப்புக்கள்**

சர்வதேச அமைப்புக்களைப் போன்றே பிராந்திய அமைப்புக்களும் அரசியற்புவியியலில் முக்கியம் பெறுகின்றன. உதாணமாக SAARC, European Union, African Union, NATO போன்றன முக்கியமானவையாகும்.

அரசியற்புவியியல் முக்கியம் கொடுக்கும் பிரச்சினைகள்: உலக பயங்கரவாதம், இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சினை,உக்ரேன் ரஷ்யப் பிரச்சினை.

## Works cited


Boyle, Mark. 2014. Human Geography: A Concise Introduction. 1 edition. Chichester, West Sussex; Malden, MA: Wiley-Blackwell

Fellmann, J.D., Getis, and Getis J (2005) Human Geography: Landscapes of Human Activities, Boston: McGraw Hill.

Greiner, A. L. (2014). *Visualizing human geography*. Wiley

Johnston, R.J., Gregory, Smith, M., (1994). The dictionary of Human Geography, Blackwell

Knox, P. L. and Marston (2015). *Human Geography: Places and Regions in Global Context, Fifth Canadian Edition Plus Mastering Geography with Pearson EText--Access Card Package*. Pearson Education Canada.

Norton, W., (2002). Human Geography, Oxford University Press, Oxford.


**Date:26.05.2022** **Signature:** 